**பதுளை மாவட்ம் 31 கமநல சேவைக் குழுக்கள் - 2023**

-----------------------------------------------------------------------------------------------

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 பதுளை மாவட்டத்தின் 31 கமநல சேவைக் குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 பதுளை மாவட்டத்தின் 31 கமநல சேவைக் குழுக்களுக்குரியதாக விநியோகிக்கப்பட்ட 31 கணக்காய்வு அறிக்கைகளிலும் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்ததுடன் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான காரணங்களாக இருந்த பொருண்மையான குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களில் உள்ளடங்கியுள்ள கணக்கீட்டு கொள்கைகளுடன் இணங்காமை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விவசாய வங்கி, கமநல அபிவிருத்திக் குழுக்களின் ஒரு அலகாக இருந்த போதிலும் பதுளை மாவட்டத்தில் 31 கமநல சேவைக் குழுக்களில் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | பிரதான அலுவலகத்தில் இருந்து ஆலோசனை பெற்று எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 13 குழுக்களுக்குச் சொந்தமான 21 கட்டிடங்கள், 06 காணிகள் மற்றும் ஏனைய 05 சொத்துக்கள் என்பவற்றின் பெறுமதி இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்குழுவினால் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் 12 குழுக்களால் எதிர்காலத்தில் சொத்துக்களைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குழுக்களுக்குச் சொந்தமான சொத்துக்களின் பெறுமதி இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) 26 குழுக்களில் 04 வருடங்கள் முதல் 35 வருடங்கள் வரையிலான கால வீச்சில் இருந்து அறவிட வேண்டிய | 02 குழுக்களினால் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் 24 குழுக்களால் பரீட்சித்து உரிய தரப்பினரிடம் இருந்து | அறவிட வேண்டியதாக உறுதிப்படுத்த முடியாத மீதிகளை முறையான அங்கீகாரத்தின் கீழ் |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டு மொத்தமான ரூபா 34,338,825 ஆன 408 கணக்கு மீதிகளை அறவிடுவதற்கோ அல்லது பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் கடன்பட்டோராக காண்பிக்கப்பட்டிருந்தது. | அறவிடுவதற்கோ அல்லது அவ்வாறு இல்லையாயின் பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும் என. | பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அறவிடக் கூடிய மீதிகளை அறவிடல் வேண்டும். |
| (இ) | 22 குழுக்கள் 02 வருடங்கள் முதல் 37 வருடங்கள் வரையிலான கால வீச்சில் இருந்து செலுத்த வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 51,971,341 ஆன 261 கணக்கு மீதிகள் முறையான அங்கீகாரத்தைப் பெற்று பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் கடன் கொடுத்தோராக காண்பிக்கப்பட்டிருந்தது. | 02 குழுக்களினால் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் 20 குழுக்களால் பரீட்சித்து உரிய தரப்பினரை இனங்கண்டு செலுத்துவதற்கோ அல்லது அவ்வாறில்லையாயின் அங்கீகாரத்தைப் பெற்று மீதியைப் பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும் என. | மீதிகளை உறுதிப்படுத்திய பின் முறையான அங்கீகாரத்தின் கீழ் கடன் மீதி தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் செலுத்த வேண்டிய மீதிகள் காணப்படுமாயின் அவற்றை விரைவாக செலுத்துதல் வேண்டும். |
| (ஈ) | 02 குழுக்களின் பெறுமதி ரூபா 496,559 ஆன பௌதீக ரீதியில் காணப்படாத டெக்டர் வண்டி மற்றும் கராஜ் என்பன நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பொருத்தமான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும் என. | பொருத்தமான பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் சீராக்குதல் வேண்டும். |
| (உ) | 04 குழுக்கள் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்திருந்த மற்றும் நிர்மானிக்கப்பட்ட கூட்டுமொத்தமாக ரூபா 473,184 ஆன நிலையான சொத்துக்கள், மூலதன செலவினம் ஆக கணக்கீடு செய்யப்படாமல் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் வரும் நிதிக்கூற்றுக்களின் போது சரியாக கணக்கீடு செய்யப்படும் என. | சரியான வகைப்படுத்தலுடன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | 12 குழுக்களின் செலவின மீளளிப்புச் செய்தல் ரூபா 1,338,374 மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஒரு குழுவினால் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் 11 குழுக்களால் எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் சரியாக கணக்குகள் தயாரிக்கப்படும் என. | வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (எ) | நிக்கப்பொத்த கமநல சேவை குழுவின் வருமானம் மற்றும் செலவினம் அல்லாத மாணிய பசளைக்காக விவசாயிகளிடம் இருந்து கிடைத்த ரூபா 1,148,649 மற்றும் அதற்காக கமநல சேவைப் பிரதி ஆணையாளருக்கு செலுத்தப்பட்ட ரூபா 811,216 | எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் சரியாக கணக்கீடு செய்யப்படும் என. | வருமானம் மற்றும் செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஏ) 03 குழுக்களின் நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 769,774 குறைவாகவும், 03 குழுக்களின் நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 452,736 அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் சரியாக கணக்கீடு செய்யப்படும் என. | சரியாக நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஐ) 04 குழுக்களின் கணக்கீட்டு முறைமையை கணனி மயப்படுத்துவதற்காக பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்ட கணனி மற்றும் துணைப் பாகங்களுக்காக செலுத்தப்பட்ட முற்பணம் ரூபா 1,155,905 மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் சரியாக கணக்கீடு செய்யப்படும் என. | முற்பணங்களை சரியாக இனங்கண்டு செய்யதல் வேண்டும். |

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 16 கமநல சேவைக் குழுக்களுக்கு உரிய 88 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி, நேரொத்த அறிக்கையுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 10,069,725 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ஒரு குழுவினால் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் 15 குழுக்களினால் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 04 கமநல சேவைக் குழுக்களின் கமநல வங்கிகள் மற்றும் குழுக்களுக்கு இடையே செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய மீதிகளுக்கு இடையே ரூபா 1,106,954 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) கும்பல்வெல கமநல சேவை குழுவினால் மீளாய்வாண்டின் யூலை முதல் நவம்பர் மாதம் வரை வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்படாது இருந்ததுடன் ஆண்டின் இறுதியில் காசேடு மற்றும் நாளாந்த பெறுவனவுப் பதிவேட்டின் பிரகாரம் காசு மீதி | ரூபா 90,000 மாத்திரம் குழு எழுதுவினைஞரால் வங்கியில் இடப்பட்டுள்ளது என. | ஒப்பீடு செய்து சரி செய்வதற்கோ அல்லது பற்றாக்குறை காணப்படுமாயின் அதற்குரிய முறையான நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 854,745 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காசு மீதி ரூபா 638,993 ஆனமையால் ரூபா 215,752 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | | எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நிக்கபொத்த கமநல சேவைக் குழுவினால் அரச வங்கி ஒன்றில் பேணிச் செல்லப்படுகின்ற நடைமுறைக் கணக்கின் மீதி நிதிக் கூற்றுக்கள், வங்கி இணக்கக் கூற்று மற்றும் காசேட்டின் பிரகாரம் ரூபா 3,709 ஆக இருந்த போதிலும் நாளாந்த காசுப் பெறுவனவுப் பதிவேட்டில் ரூபா 643,368 ஆக ரூபபா 639,659 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வேறுபாட்டிற்கான காரணங்களைப் பரீட்சித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.3.4 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 கமநல சேவைக் குழுக்களில் 06 வருடங்கள் - 26 வருடங்களுக்கு இடையிலான காலத்தில் இருந்து முன் கொண்டு வரப்படுகின்ற தொங்கல் கணக்கின் வரவு மீதி ரூபா 1,085,427 மற்றும் 05 குழுக்களில் 09 வருடங்கள் வரையான காலத்தில் இருந்து முன்கொண்டு வரப்படுகின்ற தொங்கல் கணக்கின் செலவு மீதியின் பெறுமதி ரூபா 1,252,723 என்பன தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | 02 குழுக்களினால் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் தொங்கல் கணக்கின் வரவு மீதி தொடர்பாக 08 குழுக்களினாலும், செலவு மீதி தொடர்பாக 04 குழுக்களினாலும் எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | தொங்கல் கணக்குகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 18 குழுக்களின் கூட்டுமொத்தமாக ரூபா 24,515,935 ஆன 215 சொத்து மீதிகள் மற்றும் 13 குழுக்களில் கூட்டுமொத்தமாக ரூபா 48,094,164 ஆன 140 பொறுப்பு மீதிகள் என்பவற்றுக்கு உரிய பட்டோலைகள், நிலையான சொத்துப் பதிவேடு, கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் பதிவேடு மற்றும் மீதி உறுதிப்படுத்தல் என்ப சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | 02 குழுக்களினால் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் 16 குழுக்களால் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் , விதிகள் மற்றும் பிரமானங்கள் உடனான தொடர்பு | | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 144 | - | 20 குழுக்கள் மீளாவாண்டிற்கு உரிய உள்ளகக் கணக்காய்வை மேற்கொண்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை . | சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமானங்களுக்கு இனங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 395(இ) | - | 02 குழுக்களில் 02 வங்கிக் கணக்ககளுக்காக மீளாய்வாண்டுக்கு உரிய வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 261,113 | 05 குழுக்களால் விநியோகிக்கப்பட்ட 06 மாதங்களை விஞ்சி கொடுப்பனவுக்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 13 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு குழுவினால் பதிலளிக்கப்படாது இருந்ததுடன் 04 குழுக்களால் எதிர்காலத்தில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 880 | - | 22 குழுக்களின் பொருட்கள் மற்றும் நிதிக்கு பொறுப்பான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற 238 உத்தியோகத்தர்களினால் பிணை வைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒரு குழுவினால் பதிலளிக்கப்படாது இருந்ததுடன் 21 குழுக்களால் எதிர்காலத்தில் குறித்துரைத்த பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | கமநல சேவைகள் ஆணையாளரின் சுற்றறிக்கை | | | | |
| (i) | 1986 ஒக்தோபர் 21 ஆந் திகதிய இலக்கம் 264 என்ற சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தி | 2,241,662 | 20 குழுக்களால் மீளாய்வாண்டில் மற்றும் கடந்த ஆண்டுகளுக்கு உரியதாக கிடைக்க வேண்டிய அறை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒரு குழுவினால் பதிலளிக்கப்படாது இருந்ததுடன் 19 குழுக்களால் உரிய நிறுவனங்களுக்கு அறிவித்து வாடகை அறவிடப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறை வாடகை அறவிடப்படல் வேண்டும். |
| (ii) | 2012 பெப்ரவரி 29 ஆந் திகதிய இலக்கம் 04/2012 என்ற சுற்றறிக்கை | | | | |
| | * 3.4.11 ஆம் பந்தி | - | பசற கமநல வங்கியில் இருந்து கடன் பெற்ற விவசாயிகளுக்காக விவசாய இடர் கடன் மேவுகைக் கணக்கு ஒன்று பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு சரியாக நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2014 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய இலக்கம் 07/2014 (இலக்கம் 107 திருத்தம்) என்ற சுற்றறிக்கை | - | நாளாந்தம் கையில் வைத்திருக்கக் கூடிய ஆகக் கூடிய தொகையான ரூபா 10,000 இனை விஞ்சி 14 குழுக்களால் 502 சந்தர்ப்பங்களின் போது காசு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | ஒரு குழுவினால் பதிலளிக்கப்படாது இருந்ததுடன் 13 குழுக்களால் எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (iv) | 2018 மே 17 ஆம் திகதிய இலக்கம் 7/5/2/1-2(i) என்ற சுற்றறிக்கை | 8,408,029 | ரூபா 50,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களுக்காக கமநல அபிவிருத்திப் பிரதி / உதவி ஆணையாளரின் சிற்றொப்பம் வைக்க வேண்டிய போதிலும் மடல்சீம கமநல சேவை குழுவில் 07 உறுதிச் சீட்டுக்களுக்காக அவ்வாறு சிற்றொப்பம் வைக்கப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | மேற்படி |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

பதுளை மாவட்டத்தில் 31 கமநல சேவை குழுக்களுக்காக மீளாய்வாண்டில் ஒட்டுமொத்தமான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 18,577,744 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6,314,286 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகள் ரூபா 12,263,458 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 கமநல சேவைக் குழுக்களில் ரூபா 3,006,002 பெறுமதியான விவசாய நாற்றுக்கள், விவசாய இரசாயனம் மற்றும் ஏனைய பசளைகளும், ஒரு கமநல சேவை குழுவின் பெறுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத பசளை கிலோகிராம் 94 உம், ஒரு கமநல சேவைக் குழுவில் சேதன கரைசல் பசளை லீற்றர் 1,280 உம் காலாவதியாகி இருந்த போதிலும் அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பசளை தொடர்பாக பசளைக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என மற்றும் ஏனைய இருப்புக்கள் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | விற்றுத் தீர்ப்பதற்கோ அல்லது பொருத்தமான பிரகாரம் அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | விவாசயிகளுக்கு இலவசமாக வழங்குவதற்காக 04 கமநல சேவைக் குழுக்களுக்கு கிடைக்கப் பெற்ற ரீ.எஸ்.பீ பசளை கிலோகிராம் 3,600, எம்.ஓ.பீ பசளை கிலோகிராம் 3,124 மற்றும் யூரியா கிலோகிராம் 112 என்பவற்றை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்ட போதும் இதுவரை நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதிருந்தது என. | விரைவாக ஆலோசனைகளைப் பெற்று தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 17 குழுக்களுக்கு உரிய காணிகளின் அளவு சரியாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் சட்டரீதியான உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒரு குழுவினால் பதிலளிக்கப்படாது இருந்ததுடன் 17 குழுக்களால் உரிய பிரதேச செயலகங்களில் இருந்து கோரிக்கை விடப்பட்டுள்ளது. | கமநல சேவைக் குழுக்களுக்குச் சொந்தமான காணிகளின் சட்ட ரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | எட்டெம்பிட்டி கமநல சேவைக் குழுவினால் 2011 ஆம் ஆண்டின் | வயலை மீண்டும் நல்ல நிலைக்கு | வயல் காணியை சிறந்த நிலைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | போது பதுளை வெலிமட வீதி நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக நிலஅத்துக்கொட பிரிவில் 01 றூட் வயல் காணி ஒன்று கல் உடைப்பதற்கான இயந்திரம் பொருத்துவதற்காக தனியார் கம்பனிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்துடன் செயற்திட்ட இறுதியில் வயல் முன்னர் காணப்பட்ட நிலைமையில் தயாரிப்பதற்கு உரிய கம்பனியால் பெறப்பட்டிருந்த ரூபா 290,443 வைப்பு உரிய பணிகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கொண்டு வராமையினால் வைப்பு தொகை விடுவிக்கப்பட வில்லை. | கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கொட்டவெர கமநல சேவை குழுவில் நியமிக்கப்பட்டு சேவையாற்றும் போது இடம் பெற்ற பசளை மோசடி பயன்பாடு தொடர்பாக கமநல அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தர் ஒருவர் 02 வருட காலத்திற்காக அம்பாறை மாவட்டத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருந்த ஒழுக்காற்றுக் கட்டளை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | ஒழுக்காற்று கட்டளை தாமதமின்றி அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | ஒழுக்காற்றுக் கட்டளையின் பிரகாரம் 05 கமநல குழுக்களில் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் மூன்று பேர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 12,429,435 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்படவில்லை | ஒழுக்காற்றுக் கட்டளையின் பிரகாரம் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர் 2023 செப்தெம்பர் 13 ஆந் திகதி முதல் சேவைக்கு அறிக்கையிடப்படாது இருந்ததாக றிதிபான கமநல அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தரால் 2023 செப்தெம்பர் 27 ஆம் திகதி கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. கமநல | பதிலளிக்கப்படவில்லை. | சேவைக்கு அறிக்கையிடாத உத்தியோகத்தருக்காக செலுத்தப்பட்ட சம்பளத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி பிரதி ஆணையாளரால் அந்த உத்தியோகத்தரின் சம்பளத்தை நிறுத்துமாறு கணக்காளருக்கு 2024 பெப்ரவரி 09 ஆம் திகதிய அறிவிக்கப்பட்டிருந்ததுடன் சேவைக்கு அறிக்கையிடாத உத்தியோகத்தருக்காக விரைவாக நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக 05 மாதங்கள் சம்பளமாக ரூபா 217,280 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | பத்நிகில்ல கமநல சேவை குழுவில் கமநல வங்கிக்கு நியமிக்கப்பட்டு சேவையாற்றிய விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளரால் மேற்கொள்ளப்பட்ட நிதிமோசடி செயற்பாடுகள் தொடர்பாக முறையான விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை | முறையான பரிசோதனை நடாத்தி பொருத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஐ) | பண்டாரவல நகரத்தில் அழகுபடுத்தும் நடவடிக்கைகளுக்காக ஊழியப் பங்களிப்பை வழங்கிய இலங்கை விமானப் படையினருக்காக 2021 திசெம்பர் 27 ஆம் திகதி முதல் 2023 சனவரி 31 வரை பண்டாரவல கமநல அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் விடுதி வசதிகளை வழங்கியதற்காக பண்டாரவல மாநகர சபையில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 755,200 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 03 கமநல சேவை குழுக்களில் சேவையாற்றிய விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் நான்கு பேர்களினால் மீள கையேற்கப்படாத ஏக்கர் வரி பற்றுச்சீட்டுப் புத்தகம் தொடர்பாக பரிசோதனை நடாத்துதவற்கு குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பரிசோதனை அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | முறையான பரிசோதனைகள் நடாத்தி அதன் பிரகாரம் பரிசோதனை அறிக்கையை கணக்காய்வுக்கு சமரப்பிக்கவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | 05 கமநல சேவை குழுக்களில் 05 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 823,254 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | அறவிட வேண்டிய மீதிகளை அறவிடல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 11 குழுக்களில் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் 59 பேர்களுக்கு விற்பனைப் பணம் செலுத்தும் அடிப்படையில் மீளாய்வாண்டிலும், அதற்கு முன்னைய ஆண்டுகளின் போதும் விநியோகிக்கப்பட்ட பொருட்கள்/ உபகரணங்களுக்காக அறவிட வேண்டிய ரூபா 7,128,910 அறவிடப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய பணத்தை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 குழுக்களுக்குச் சொந்தமான 09 நிலையான சொத்துக்கள் 02 வருடங்களுக்கும் 08 வருடங்களுக்கும் இடையிலான காலப்பகுதியில் இருந்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | எதிர்காலத்தில் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை உச்ச அளவில் பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 02 குழுக்களில் உடைந்த நிலையில் உத்தியோக பூர்வ இல்லங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கமநல சேவை மாவட்ட அலுவலகம் மற்றும் கமநல சேவைக் குழுக்களுக்கு உரிய 10 பதவிகளில் 235 ஊழயர்களில் வெற்றிடங்கள் காணப்பட்டது. | பற்றாக்குறையான பதவியணியினர் தொடர்பாக பிரதான அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களுக்காக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கமநல வங்கி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1999 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 வரையான காலத்தில் 30 குழுக்களினால் 3,162 விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட விவசாய கடன் தொகையில் ரூபா 78,721,568 தொகை, 25 குழுக்களினால் 492 விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட செயற்திட்டக் கடன் தொகையில் ரூபா 15,756,064 தொகை, 16 குழுக்களினால் 387 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொழில் முயற்சிக் கடன் தொகையில் ரூபா 10,812,343 மற்றும் 09 குழுக்களால் 38 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விவசாய உபகரணங்கள் மற்றும் ஏனைய கடன் தொகையில் ரூபா 1,352,118 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 106,642,093 உடன்படிக்கையின் பிரகாரம் முறையாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | 02 குழுக்களால் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் 28 குழுக்களால் நீதிமன்ற நடவடிக்கைகளை எடுத்தல், விவசாய நடுவர் சபைக்கு அனுப்புதல், அலுவலக பரிசோதனைகளை நடாத்துதல், அறிவித்தல் கடிதம் அனுப்புதல் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரிய உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |